**சுருக்கம்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பிரதிநிதிகள் மற்றும் கிராம ஊராட்சி தலைவர் மற்றும் கிராம ஊராட்சி உறுப்பினர்களுக்கு அமர்வுப்படியினை உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா.4) துறை

அரசாணை (நிலை) எண். 70

நாள் 10.06.2022.
சுபகிருது வைகாசி 27,
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டவை.

1. அரசாணை (நிலை) எண்.54, ஊரக வளர்ச்சிமற்றும் ஊராட்சித் (பரா.4) துறை, நாள் 29.06.2012.
2. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு- IV-82
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண். 73232/2021 / ப.ரா.2.3, நாள் 01.05.2022.

-----

**ஆணை:-**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கிராம ஊராட்சி தலைவர்கள் மற்றும் கிராம ஊராட்சி உறுப்பினர்களுக்கு அமர்வுப்படி உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் விதி எண்.110-ன் கீழ் 22.04.2022 நாளன்று கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

*"மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பிரதிநிதிகளுக்கு கூட்டங்களில் கலந்து கொள்ளும் நாட்களில் அமர்வுப்படித் தொகை பத்து மடங்காகவும், கிராம ஊராட்சித் தலைவர், கிராம ஊராட்சி உறுப்பினர்களுக்கு அமர்வுப்படித் தொகை ஐந்து மடங்காகவும் உயர்த்தி வழங்கப்படும். "*

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தின் வாயிலாக தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ன் படி தற்போது நடைமுறையில் உள்ள மூன்று அடுக்கு ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளான மாவட்ட ஊராட்சியின் தலைவர்/ உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள்/ உறுப்பினர்கள் மற்றும்

கிராம ஊராட்சி தலைவர்/ உறுப்பினர்களுக்கு அமர்வுப்படி வழங்கி அரசாணை(நிலை) எண்.101, ஊரக வளர்ச்சி (C1) துறை, நாள் 27.03.1997-ன் படி ஆணை வெளியிடப்பட்டுள்ளது எனவும், மேலும், அரசாணை (நிலை) எண்.54, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் (ப.ரா.4) துறை, நாள் 29.06.2012-ன் படி, கிராம ஊராட்சி தலைவர்கள் மற்றும் கிராம ஊராட்சி உறுப்பினர்களுக்கு மட்டும் அமர்வுப்படி உயர்த்தி வழங்கப்பட்டது எனவும், மற்ற உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு உயர்த்தப்படவில்லை எனவும், பல ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் இருந்த அமர்வுப்படியினை உயர்த்தி வழங்கக்கோரி வரப்பெற்ற கோரிக்கைகளின் அடிப்படையில் தற்போது வழங்கப்படும் அமர்வுப்படியில் இருந்து மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பிரதிநிதிகளுக்கு கூட்டங்களில் கலந்து கொள்ளும் நாட்களில் மாதம் ஒன்றிற்கு ஒரு முறை மட்டும் அமர்வுப்படித் தொகையினை பத்து மடங்காக உயர்த்தி வழங்கிடவும், கிராம ஊராட்சித் தலைவர், கிராம ஊராட்சி உறுப்பினர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ஒரு முறை மட்டும் அமர்வுப்படித் தொகை ஐந்து மடங்காக உயர்த்தி வழங்கிடவும், இவ்வாறு அமர்வுத் தொகை உயர்த்தி வழங்குவதன் காரணமாக தமிழகத்திலுள்ள 12,525 கிராம ஊராட்சித் தலைவர்கள், 99,327 கிராம ஊராட்சி உறுப்பினர்கள், 388 ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், 6,471 ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள், 36 மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் மற்றும் 655 மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட 1.19 இலட்சம் ஊரக உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பயன்பெறுவர் எனவும் தெரிவித்துள்ளார்.

4. இதன் அடிப்படையில், மூன்று அடுக்கு உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு அமர்வுப்படி மாதம் ஒன்றிற்கு 1 அமர்விற்கு மட்டும் உயர்த்தி வழங்குவதற்கான விவரம் பின்வருமாறு:-

| வ. எண். | பதவியின் பெயர் | தற்போது வழங்கப்படும் மாதாந்திர அமர்வுப்படி (ரூ.) | உயர்த்தி வழங்கப்பட வுள்ள மாதாந்திர அமர்வுப்படி (ஒரு மாதத்தில் 1 அமர்வுக்கு மட்டும்) (ரூ.) |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | கிராம ஊராட்சித் தலைவர் | 100 | 500 |
| 2 | கிராம் ஊராட்சி உறுப்பினர் | 50 | 250 |
| 3 | ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் | 75 | 750 |
| 4 | ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் | 50 | 500 |
| 5 | மாவட்ட ஊராட்சித் தலைவர் | 100 | 1000 |
| 6 | மாவட்ட ஊராட்சி உறுப்பினர் | 100 | 1000 |

மேலும், மேற்குறிப்பிட்டுள்ள அட்டவணையின்படி கலம் 4-ல் தெரிவிக்கப்பட்டுள்ள தொகையை ஒருமாதத்திற்கு அனுமதிக்க இயலும் எனவும், ஒரு மாதத்தில் பல கூட்டங்கள் நடத்தப்படினும், மாதம் ஒன்றிற்கு ஒரு அமர்வுப்படியே வழங்கப்படும் எனவும், உயர்த்தி வழங்கப்படும் அமர்வுப்படிக்கான செலவினங்கள் அந்தந்த மாவட்ட ஊராட்சிகள் / ஊராட்சி ஒன்றியங்கள் / கிராம ஊராட்சி அமைப்புகள் தங்களது பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம் எனவும், 10 ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் இருந்த அமர்வுப்படியினை உயர்த்தி வழங்குவது அவசியமாகிறது என்ற காரணத்தினால் மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பிரதிநிதிகளுக்கு மாதம் ஒன்றிற்கு 1 அமர்விற்கு மட்டும் பத்து மடங்கு உயர்த்தியும் கிராம ஊராட்சி தலைவர் மற்றும் கிராம ஊராட்சி உறுப்பினர்களுக்கு மாதம் ஒன்றிற்கு 1 அமர்விற்கு மட்டும் ஐந்து மடங்காக உயர்த்தியும் வழங்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்து, கீழ்குறிப்பிட்டுள்ளவாறு மாவட்ட ஊராட்சித் தலைவர்/பிரதிநிதிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்/ பிரதிநிதிகளுக்கு மாதம் ஒன்றிற்கு 1 அமர்விற்கு மட்டும் அமர்வுப்படியினை பத்து மடங்கு உயர்த்தியும் கிராம ஊராட்சி தலைவர் மற்றும் கிராம ஊராட்சி உறுப்பினர்களுக்கு மாதம் ஒன்றிற்கு 1 அமர்விற்கு மட்டும் அமர்வுப்படியினை ஐந்து மடங்காக உயர்த்தியும் வழங்கிட அனுமதித்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது:-

| வ. எண். | பதவியின் பெயர் | தற்போது வழங்கப்படும் மாதாந்திர அமர்வுப்படி (ரூ.) | உயர்த்தி வழங்கப்பட வுள்ள மாதாந்திர அமர்வுப்படி (ஒரு மாதத்தில் 1 அமர்வுக்கு மட்டும்) (ரூ.) |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | கிராம ஊராட்சித் தலைவர் | 100 | 500 |
| 2 | கிராம ஊராட்சி உறுப்பினர் | 50 | 250 |
| 3 | ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் | 75 | 750 |
| 4 | ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் | 50 | 500 |
| 5 | மாவட்ட ஊராட்சித் தலைவர் | 100 | 1000 |
| 6 | மாவட்ட ஊராட்சி உறுப்பினர் | 100 | 1000 |

6. மேலே பத்தி 5ல் உயர்த்தி வழங்கப்படும் அமர்வுப்படிக்கான செலவினங்கள் அந்தந்த மாவட்ட ஊராட்சிகள் / ஊராட்சி ஒன்றியங்கள் / கிராம ஊராட்சி அமைப்புகள் தங்களது பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அரசு அனுமதி வழங்குகிறது. மேலும், மேற்கண்ட அமர்வுப்படி உயர்வு இவ்வரசாணை வெளியிடப்படும் நாள் முதல் நடைமுறைக்கு வரும்.

7. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.28727/Fin(RD)/2022, நாள்.10.06.22-ன்படி பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

பெ.அமுதா,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை-15
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குநர்கள்.
அனைத்து மாவட்ட உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)
சம்பளக் கணக்கு அலுவலர்(தெற்கு), சென்னை-35,
அனைத்து மாவட்ட ஊராட்சிகள் / வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,
அனைத்து மாவட்ட கருவூலங்கள் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மூலமாக)
**நகல்**
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர்-III, சென்னை-9
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை-9
அரசு தலைமைச் செயலாளரின் முதன்மைத் தனிச்செயலாளர், சென்னை-9
நிதி(ஊரக வளர்ச்சி)/சட்டத் துறை, சென்னை-9,
அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மைத் தனிச் செயலர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை-9
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா.1,பரா.2, பரா.3 மற்றும் வ.செ.(ம) ஒ.துறை,
இருப்பு கோப்பு/உதிரி நகல்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்